CENTRE FOR POLICY ALTERNATIVES

# இலங்கையில் தொடரும் அடக்குமுறை குறித்த கரிசனை

**2023 பெப்ரவரி 6, கொழும்பு, இலங்கை**

2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி நடைபெற்ற இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தன்றும் அதற்கு முந்தைய தினத்தன்றும் இடம்பெற்ற அதிகளவிலான படைபல பிரயோகம், தன்னிச்சையான நடவடிக்கைகள் மற்றும் அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களை கைதுசெய்வதில் உரியமுறை பின்பற்றப்படாமல் அப்பட்டமான புறக்கணிப்பு என்பன தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளது. நாட்டில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பொது வளங்களை வீணடிப்பது தொடர்பில் சட்டப்படியான கரிசனைகளுக்கு குரல் எழுப்பிய, அதேவேளை அமைதியான போராட்டங்களின் ஒரு வடிவமான 'சத்தியாகிரகத்தில்' ஈடுபட்ட, அமைதியான போராட்டக்காரர்கள் வலுக்கட்டாயமாக கைதுசெய்யப்பட்ட விதத்தை ஊடகச் செய்திகள் சான்று பகிர்கின்றன. கைதுசெய்யப்பட்டபோது தமது வழக்கறிஞர்களை அணுகுவதற்கு மறுக்கப்பட்டமை இவ்விடயங்களை மேலும் தீவிரமாக்கியது.

அமைதியான போராட்டக்காரர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு எதிராக பாதுகாப்புப் படைகளின் அடக்குமுறை சம்பவங்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் முறையற்ற  படைபல பிரயோகம் என்பவற்றை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தொடர்ச்சியாக கண்காணித்து வருகிறது. மேலும், பயம் மற்றும் அடக்குமுறை தொடர்பான அவதானிக்கக்கூடிய சூழலை தீவிரபடுத்துவதற்கு வழக்கமான படைபலத்தை பயன்படுத்துதல், கைதுசெய்தல் மற்றும் மிரட்டல் போன்ற நடவடிக்கைகள் இடம்பெறுவது தொடர்பிலும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கரிசனை கொண்டுள்ளது. குடிமக்கள் கடுமையான பொருளாதார நிலைமைகளின் சுமைகளை தொடர்ந்து சுமந்து வருகின்ற சூழலில் இந்த அடக்குமுறை போக்குகளின் தொடர்ச்சியை எடுத்துக்காட்டும் பல சம்பவங்களை தற்போதைய ஆண்டு கண்டுள்ளது என்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவனத்தில் எடுத்துள்ளது.

ஒரு ஜனநாயகத்தின் ஆரோக்கியமான செயல்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமையானது, ஒன்றுகூடல், இணைந்த செயல்பாடு மற்றும் கருத்து சுதந்திரம்  ஆகியவற்றில் வெளிப்படுகிறது என்று  மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மீண்டும் வலியுறுத்துகின்றது. இந்த உரிமைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துவது இலங்கையின் சட்டத்தின் ஆட்சிக்கும் ஜனநாயகத்திற்கும் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும். 1993இல் நடைபெற்ற ஜனகோஷா வழக்கில் நீதிபதி மார்க் பெர்ணாண்டோவின் வார்த்தைகளில், "இன்று சட்டப்படியான எதிர்ப்பின் அமைதியான வெளிப்பாட்டை முடக்குவது வேறொரு நாளில் பேரழிவை விளைவிக்கும்." இந்த வார்த்தைகள் ஆழமான நெருக்கடி மற்றும் பல நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்ளும் எந்த ஒரு நாட்டிலும் எதிரொலிக்கும். அத்தகைய சூழலில் அதிகாரிகள் குறிப்பிட்ட தற்காலிக   மற்றும் தன்னிச்சையான நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் குடிமக்கள் தொடர்பில் தமது கடமைகளை கடைப்பிடிக்குமாறும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்துகிறது.

போராட்டம் நடத்தும் உரிமை தொடர்பான சட்டப் பிரச்சினை குறித்து கருத்து விரைவில் வெளியிடப்படும்.

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka Tel: +94112081384, +94112081385, +94112081386 | Fax: +9411 2081388 | Email: info@cpalanka.org | Web: www.cpalanka.org